# அறிவித்தல்

## சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல் - 2022/ 2023

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33(உ) உறுப்புரையின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான தகைமைகளைக் கொண்ட நபர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்காக 2021 நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய 2255/24 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

01. i. இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக;

ii. சட்டத் தொழில்துறையில் அதிசிறந்த நிலையை அடைந்துள்ளவராகவும், உயர்ந்த தரத்திலான நடத்தையையும் தொழில்சார் நேர்மையையும் பேணுபவராக;

iii. (அ) இலங்கையின் எந்நீதிமன்றத்திலேனும் சட்ட வாதாட்டங்களினூடாக முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள; அல்லது

(ஆ) சட்டத்தின் மேம்பாட்டுக்காகச் சட்ட வாதாட்டங்களின் மூலம் முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள; அல்லது

(இ) அரச துறையிலோ அல்லது இலங்கையிலோ அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலோ சிரேஷ்ட மட்டத்திலான சட்டவியல் நிபுணரொருவராக மிக விசேடமான அத்துடன் தலைசிறந்த பங்களிப்பை வழங்கியிருத்தல் அல்லது இலங்கைக்கான புகழை அல்லது பெருமதிப்பைப் பெற்றுக்கொடுத்துள்ள;

iv. நன்மதிப்பையும் நல்லொழுக்கத்தையும் கொண்டுள்ள;

v. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை மீறாத;

vi. சட்டத்தின் ஆட்சியை அல்லது நீதிமன்றத்தின் சுயாதீனத்தைச் சீர்குலைக்கும் அல்லது பாதிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபட்டிராத;

vii. உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளைக்கு ஆளாக்கப்படாத, நீதிமன்றமொன்றினால் தொழில்சார் துர்நடத்தைகள் அல்லது விடுபாடுகளுக்கு குற்றவாளியாக்கப்படாத, நீதிமன்ற அவமதித்தல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படாத, மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறியதொரு குற்றம் தவிர்ந்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் எந்தவொரு குற்றத்துக்கும் குற்றவாளியாக்கப்படாத வங்குரோத்து நிலையில் இல்லாத;

viii. சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமிப்பதற்காக அவரால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட முன்னர் குறைந்தபட்சம் ஐந்து வருட காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி செலுத்துநரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள;

ஒரு நபராக இருத்தல்.

02. சட்டம் அத்துடன்/அல்லது சட்ட முறைமை பற்றிய நூல்களை அல்லது வெளியீடுகளை எழுதியிருத்தல், தேசிய சர்வதேச அல்லது மாநாடுகளில் பத்திரங்களைச் சமர்ப்பித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வதேச நிறுவனங்களில் சட்டத்துறையில் உயர் கற்கைளை மேற்கொண்டிருத்தல், அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சட்டப் பாடத்தைக் கற்பித்திருத்தல், சட்டத்தின் புதுப்பரப்புகளில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவு பெற்றிருத்தல், இத்தொழில்துறைக்கு அர்த்தமான பங்களிப்பாற்றியுள்ள கனிஷ்ட சட்டத்தரணிகளைப் பயிற்றுவித்திருத்தல் ஆகியன சனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்படுவதற்கான மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

03. அவர் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலங்கள் இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். (விசேட சந்தர்ப்பங்களின் போது ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள, பதினைந்து (15) வருட காலச் சேவையை கொண்டுள்ள இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளும் சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கக் கவனத்தில் கொள்ளப்படுவர்.)

04. விண்ணப்பதாரி ஒருவர் நொத்தாரிசு ஒருவராக சேவையில் ஈடுபட்டிருத்தல் ஒரு தகைமையீனமாக கருதப்படுவதுடன் விண்ணப்பதாரி மூலமாக நேரடியாக அல்லது மறைமுகமாக மூன்றாம் தரப்பினர் மூலம் உரிய விண்ணப்பம் தொடர்பில் அல்லது சனாதிபதி சட்டத்தரணியாக நியமித்தல் தொடர்பில் எந்தவொரு தலையீட்டையும் மேற்கொள்ளல் தகைமையின்மையாகக் கருதப்படும்.

05. எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பம் மூலம் தவறான தகவல் வழங்குதல் அல்லது போலி ஆவணம் சமர்ப்பித்தல் அல்லது விடயங்களை மறைத்திருப்பாராயின் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்தின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்ட எழுத்துமூல விண்ணப்பங்கள் ஏற்புடைய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் 2023 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி அலுவலகம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்பட்டுள்ள கடிதவுறையின் இடப்பக்க மேல்மூலையில் ‘‘சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல்-2023’’ எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை www.presidentsoffice.gov.lk மூலமாகவும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஈ எம் எஸ் பி ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

2023 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி
கொழும்பு 01
சனாதிபதி செயலகம்,